முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 48 - தமிழ் இலக்கியநயம்

## புள்ளி வழங்கும் திட்டம்



பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை - 2018

## 48 - இலக்கியநயம்

### புள்ளி வழங்கும் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| பகுதி I | 1 ஆம் வினா | (கட்டாய வினா) | 04x05 = 20 புள்ளிகள் |
| | 2 ஆம் வினா | (கட்டாய வினா) | 05x05 = 25 புள்ளிகள் |
| பகுதி II | 3ஆம் வினா | (கட்டாய வினா) | 05x05 = 25 புள்ளிகள் |

பகுதி III ( எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும்)

| | | |
|---|---|---|
| 4ஆம் வினா | 15 புள்ளிகள் | |
| 5ஆம் வினா | 15 புள்ளிகள் | 15 x 02 = 30 புள்ளிகள் |
| 6ஆம் வினா | 15 புள்ளிகள் | |
| 7ஆம் வினா | 15 புள்ளிகள் | |

**மொத்தம் 100 புள்ளிகள்**

# க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2018

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) ............................................................ ✓ $\frac{4}{5}$
............................................................
............................................................

(ii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(iii) ............................................................ ✓ $\frac{3}{5}$
............................................................
............................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும். அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும். துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும். **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை X அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

ஒரு வினாப்பத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.** பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான புள்ளிகளை தனி தனியான புள்ளித்தாளில் பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II, III" எனும் நிரல்களில் உரிய நிரலில் பதிதல் வேண்டும்.

**முக்கியக் குறிப்பு :**
**சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் வினாப்பத்திரம் I, II, மற்றும் III என்ற நிரலில் உரிய வகையில் பதிதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.**

ooo

# 48 - தமிழ் இலக்கிய நயம் ( புதிய பாடத்திட்டம்)

## பகுதி I

1. (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.

(i) "அதோ! போதிமரங்கள்; பாவ வெயில் மறைக்கும் அறக்குடைகள்"

(அ) மரங்கள், போதி மரங்கள் எனச் சுட்டப்பட்டமைக்கான காரணம் யாது?

(ஆ) மரங்கள் எவ்வாறு அறக்குடைகளாகின்றன?

(ii) "... பிள்ளைமீன்
புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை"

(அ) இங்கு நாடன் என்று சுட்டப்பெறுபவன் யார்?

(ஆ) திருமடந்தை யாருக்கு உவமிக்கப்படுகிறாள்?

(iii) "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு..."

(அ) இங்கு 'கால்' எனப்படுவது யாது?

(ஆ) 'நுசுப்பு' எனப்படுவது யாது?

(iv) "இன்றுவரை அம்மா
கதவுகளின் பின்னிருந்துதான்
அப்பாவோடு பேசுகிறாள்.
கடைசிவரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க."

(அ) 'அம்மா' என்ற பாத்திரத்தினூடாக, கவிஞர் உணர்த்தவிழைவது யாது?

(ஆ) இங்கு 'தூர்' என்ற குறியீடு எதனை உணர்த்துகின்றது?

(v) "கோழிக்குஞ்சை அலகால் கவ்வி, அசகாயமாய்ப் பறக்க முயலும் காகமாய் அவன் நழுவுவதற்கு முன் என் பஞ்சப்பாட்டின் முதலடியைக் கீழ்ஸ்தாயியில் சுரம் கூட்டினேன்."

(அ) கோழிக்குஞ்சு எதற்கு உருவகிக்கப்பட்டுள்ளது?

(ஆ) 'பஞ்சப்பாட்டு' என்ற தொடரின் மூலம் எழுத்தாளர் எதனைச் சுட்டுகிறார்?

**(i) (அ) புத்தர் போதி மரத்தின் கீழ் அமர்ந்து ஞானம் பெற்றமையால்.**

**(ஆ) பிரதிபலன் எதிர்பார்க்காமல் பிற உயிர்களுக்கு உதவுவதால்./ பாவ வெயிலை மறைக்கும் செயலால்.**

**(ii) (அ) வீமன் / வீமராஜன் / விதர்ப்ப நாட்டரசன்**

**(ஆ) தமயந்திக்கு**

**(iii) (அ) பூக்காம்பு / காம்பு**

**(ஆ) இடுப்பு/ இடை**

(iv) (அ) பெண்ணடிமைத்தனம்

(ஆ) ஆணாதிக்கம் / அடக்கு முறை

(v) (அ) கடிதம் / அஞ்சல் / தபால் / திருமுகம் / காகிதம் / காயிதம்

(ஆ) வறுமை / பஞ்ச நிலை

**( 5 x 04 = 20 புள்ளிகள் )**

2. கீழ்க்காணும் பாடற்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

வெண்டை விரல்கள் விறைத்திடினும் எங்கள்
மேனி குளிரில் நடுங்கிடினும் - இரு
கெண்டை விழிகள் பளபளக்கும், தளிர்
கிள்ளவோ கைகள் பரபரக்கும்!

கூடை அசைந்து பக்கத்திலும் வந்து
கூட்டும் 'கிறுக் கிறுக்' கோசையிலே - நெஞ்ச
மேடையிலே சதி ராடுமெண் ணங்களின்
வேதனை துன்ப ஒலிகேட்கும்!

பக்க நிரைச்செடி சிக்கிடும் போதிலும்
பக்குவ மாகவி லக்கிச் செல்வோம் - எம்மைச்
சிக்கவைத் திருக்கும் அடிமைத் தளையினை
தூக்கி யெறியத் துணிவு கொள்வோம்!

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென
மேலுறும் எண்ணம் எங்கள் மனதில் - இனி
முட்டித் ததும்பி முளைத்து விடும் எம்மை
மூடிய பேரிருள் ஓட்டிடுவோம்.

(i) தாம் எடுத்துக்கொண்ட பணியில் தோட்டத் தொழிலாளிப் பெண்கள் கொண்டுள்ள ஈடுபாட்டைக் கவிஞர் எவ்வாறு புலப்படுத்துகிறார்?

(ii) பெண் தொழிலாளிகளின் துயரநிலை புலப்படும் அடிகள் **இரண்டைத்** தருக.

(iii) தோட்டத் தொழிலாளிப் பெண்களை மூடியுள்ள இருளை அகற்றவல்லது எதுவென்று கவிஞர் கருதுகிறார்?

(iv) இங்கு கையாளப்பட்டுள்ள உவமைகள் **இரண்டை** விளக்குக.

(v) 'நெஞ்ச மேடையிலே சதிராடுமெண்ணங்கள்' என்ற தொடரின் இலக்கிய நயத்தை விவரிக்குக.

(i) - **விரல்கள் விறைத்திட்டாலும் கொழுந்தைக் கிள்ளுவதற்கு கைகள் விரைந்து செல்லுதல்.**
- **தங்களது உடல் குளிரினால் தாக்கப்பட்டு நடுங்கினாலும் கொழுந்தைக் கிள்ளுவதில் கவனமெடுத்தல்.**
- **கண்கள் கலங்கினாலும் கொழுந்தெடுப்பதில் கவனமெடுத்தல்.**
- **பக்கத்தில் உள்ள செடிகள் சிக்கிடும் போதும் அதனைக் கவனமாக விலக்கிச் சென்று தம் பணியில் ஈடுபடல்.**

(ii) - "வெண்டை விரல்கள் விறைத்திடினும் மேனிகுளிரில் நடுங்கிடினும்.."

- "கெண்டை விழிகள் பளபளக்கும்"
- "நெஞ்ச மேடையிலே சதிராடு மெண்ணங்களின் வேதனை துன்ப ஒலிகேட்கும்"
- "எம்மை சிக்கவைத்திருக்கும் அடிமைத் தளையினை"

(iii) விடுதலை வேட்கை / விடுதலை உணர்வு

(iv) வெண்டை விரல்கள்

| | | |
|---|---|---|
| உவமானம் | :- | வெண்டைக்காய் |
| உவமேயம் | :- | விரல்கள் |
| பொதுத்தன்மை | :- | தோற்றம் / வடிவம் / உருவம் |

கெண்டை விழிகள்

| | | |
|---|---|---|
| உவமானம் | :- | கெண்டை மீன் |
| உவமேயம் | :- | விழிகள் |
| பொதுத்தன்மை | :- | தோற்றம் / துடிதுடித்தல் |

வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பென

| | | |
|---|---|---|
| உவமானம் | :- | வெட்டிய செடியில் புடைத்தெழும் அரும்பு |
| உவமேயம் | :- | மனதில் வீறுகொண்டெழும் எண்ணங்கள் |
| பொதுத்தன்மை | :- | வெட்டவெட்டத் தழைத்தல் / வளர்தல் / மேலெழுதல் |

(v) இங்கு தோட்டத் தொழிலாளிப் பெண்களின் நெஞ்சத்தைக் கவிஞர் மேடையாகவும், நெஞ்சத்தில் எழும் எண்ணங்களைச் சதிராட்டமாகவும் உருவகித்துள்ளமை நயக்கத்தக்கது.

( 5 x 05 = 25 புள்ளிகள் )

## பகுதி II

**3.** கீழ்க்காணும் உரைப்பகுதியை வாசித்து, தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

உனக்குத் தெரியுமா? புகாரிலிருந்து மதுரைக்கு வந்துகொண்டிருந்தபோது இடைவழியில் ஓர்நாள், கோசிகன் எனும் பார்ப்பான் மாதவியிடமிருந்து மடலொன்று கொண்டு வந்தான். புனுகு நெய்யின் வாசம் வீசும் அம்மடலைப் பிரித்ததுமே கோவலன் மாதவியின் நினைவுகளில் மூழ்கிப்போனான். மடலை வாசிக்காது மயங்கி நின்றான். அடிகள் கவுந்தி, தன் குரலைச் செருமி நாங்களிரு பெண்கள் அங்கிருக்கிறோம் என்பதைக் கோவலனுக்குத் தெரிவித்தார். பிறகுதான் அம்மடலை அவன் வாசித்தான். பெண்ணே! மாதவியெனும் மங்கை நல்லாளை நான் அன்றுதான் முழுமையாக அறிந்தேன். எனக்கு இந்த மலர்களைக் கொண்டு மாலை தான் தொடுக்கத் தெரியும். ஆனால் சொற்களைக் கொண்டு சரம் தொடுக்கத் தெரிந்த வித்தகி அவள். அருகன் பள்ளியில் எண்ணையும் எழுத்தையும் கற்றவள்தான் நான். ஆயினும் மாதவிபோல் கவிபுனையக் கற்றவளில்லை, ஆழ்ந்த தர்க்க நூல், தேர்ந்த சாத்திரம் பயின்றவளில்லை. அம்மடலில், கள்வர் போல நள்ளிரவில், புகார் விட்டு நீங்கினீரே, இதில் என் குற்றம் என்ன என்று கோவலனிடம் கேட்டிருந்தாள் அவள். தண்டனை பெறுகின்ற குற்றவாளிக்கு தான் செய்த குற்றமென்னவென்று தெரிந்துவிடும். தெரியவில்லையெனில் தண்டிக்கும்போது அது அவனுக்குத் தெரிவிக்கப்படும். ஆனால் செய்த குற்றமென்னவென்று அறியாமல் தண்டனையை அனுபவிக்கின்றேனே. இதில் என் குற்றமென்ன? என்று கேட்டிருந்தாளவள்.

(i) மாதவி மீதான காதலை, கோவலன் முழுவதுமாகத் துறந்துவிடவில்லை என்பது இங்கு எவ்வாறு புலப்படுத்தப்படுகின்றது?

(ii) கவுந்தி அடிகளினதும் மாதவியினதும் புத்தி சாதுரியம் வெளிப்படும் இடம் ஒவ்வொன்று தருக.

(iii) இங்கு கண்ணகியின் பெருந்தன்மை வெளிப்படுமாற்றை எடுத்துரைக்குக.

(iv) இப்பகுதியில் காணப்படும் உவமை அணி ஒன்றை எடுத்துக்காட்டி விளக்குக.

(v) "சொற்களைக் கொண்டு சரம் தொடுக்கத் தெரிந்த வித்தகி அவள்" என்ற தொடரில் நீர் காணும் நயத்தினை விவரிக்குக.

(i)
- **புனுகு நெய்யின் வாசம் வீசும் மாதவியின் மடலைப் பிரித்ததுமே கோவலன் மாதவியின் நினைவுகளில் மூழ்கிப் போதல்.**
- **மடலை வாசிக்காது மயங்கி நிற்றல்.**

(ii)
- **கவுந்தியடிகள்**
  - **கோவலன் மடலை வாசிக்காது நின்றபோது குரலைச் செருமி தாங்கள் அங்கிருப்பதை நாகரிகமாக உணர்த்துதல் .**
- **மாதவி**
  - **தனது ஞாபகத்தை கோவலனுக்கு உண்டுபண்ண புனுகு நெய் பூசிய மடலை அனுப்புதல்.**
  - **"கள்வர் போல் நள்ளிரவில், புகார் விட்டு நீங்கினீரே. இதில் என் குற்றம் என்ன"வென்று கோவலனிடம் கேட்டல்.**
  - **"தண்டனை பெறுகின்ற குற்றவாளிக்குத் தான் செய்த குற்றமென்னவென்று தெரிந்து விடும். தெரியவில்லையெனில் தண்டிக்கும்போது அது அவனுக்குத் தெரிவிக்கப்படும். ஆனால் செய்த குற்றமென்னவென்று அறியாமல் தண்டனை அனுபவிக்கின்றேனே இதில் என் குற்றமென்ன?" எனக் கேட்டல்.**
  - **கண்ணகியின் கூற்றுக்கள் மூலம் வெளிப்படல்.**

**(ஏதாவது ஒன்று)**

(iii) ● தனது கணவனைக் கவர்ந்தவள் என்ற போதிலும் கோபமோ, வெறுப்போ இல்லாது தன்னிலும் மாதவி கல்வியில் சிறந்தவள் என்று தன்னுடன் ஒப்பிட்டுக் கூறுவதன் மூலம்.

- "சொற்களைக் கொண்டு சரம் தொடுக்கத் தெரிந்த வித்தகி."
- "அருகன் பள்ளியில் எண்ணையும் எழுத்தையும் கற்றவள் தான் நான். ஆயினும் மாதவி போல் கவி புனையக் கற்றவளில்லை."
- "ஆழ்ந்த தர்க்க நூல், தேர்ந்த சாத்திரம் கற்றவளில்லை" என்று தன்னைக் கூறுவதன் மூலம் மாதவியின் கல்வியறிவை மெச்சிக் கூறுதல்.

(iv) "கள்வர் போல நள்ளிரவில் புகார் விட்டு நீங்கினீரே.."

- கோவலன் நள்ளிரவில் புகார் நகர்விட்டு நீங்குவது, யாருக்கும் தெரியாது நள்ளிரவில் நடமாடித் தம் காரியத்தை நிறைவேற்றும் கள்வர்க்கு ஒப்பிடப்பட்டுள்ளது.

**அல்லது**

உவமானம் - கள்வர்

உவமேயம் - கோவலன்

பொதுத்தன்மை - நள்ளிரவில் யாருக்கும் தெரியாது தம் காரியத்தை நிறைவேற்றுதல்.

(v) ● மாதவியின் கவி புனையும் ஆற்றலை, சொற்களைக் கொண்டு மாலை தொடுக்கத் தெரிந்த வித்தகி என்று கூறுதல். மேலும், வித்தகி என்பதில் கல்வியறிவு உடையவள் என்பதும் அவளது கவிதையின் மேன்மையும் புலப்படுதல்.

**அல்லது**

● மாதவியின் கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்த சொற்களை மலராகவும், கவிதையை சரமாகவும் உருவகித்துக் கூறுதல்.

**( 5 x 05 = 25 புள்ளிகள் )**

## பகுதி III

● எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை எழுதுக.

**4. கிஷ்கிந்தைப் படலத்தில்,** தாரையின்

(i) தோற்றம்

(ii) மதிநுட்பத்துடன் கூடிய சொல்வன்மை

என்பவற்றைக் கம்பர் சித்திரிக்குமாற்றை விவரிக்குக.

(i) தோற்றம்

✓ கணவனை இழந்ததால் பொலிவற்றுக் காணப்பட்டமை.

✓ நறுமணம் கமழும் நீண்ட கூந்தலை உடையவளாகக் காணப்பட்டமை.

✓ அழகிய தோள்களும் நீண்ட கண்களும் உடையவளாகக் காணப்பட்டமை.

✓ வெண்மையான முழு நிலவு பகல் பொழுதில் ஒளி குறைந்து காணப்படுவது போலக் காணப்பட்டமை.

✓ திருமாங்கல்யக் கயிற்றை நீக்கி பிற மணி ஆபரணங்களை அணியாமல், மலர் மாலைகளை அணியாமல், குங்குமம் சந்தனக் குழம்புகளைப் பூசாமல், தனங்களைப் பாக்கு மரம் போன்ற கழுத்தோடு சேர்த்து மேலாடையால் போர்த்து மூடிக் கொண்டு நின்றமை.

**( 08 புள்ளிகள் )**

(ii) மதி நுட்பத்துடன் கூடிய சொல்வன்மை

- ✓ "வீரனே! அளவில்லாத காலம் தவம் செய்தால் மட்டுமே உன் வருகை தேவர்களுக்கு வாய்க்கும்" என்று கூறியமை.
- ✓ " உன் பாதங்கள் எங்கள் இருப்பிடத்தில் பட்டதால் இனிது வாழப் பெற்றவர்களானோம்" எனக் கூறியமை.
- ✓ "துன்பம் தீர்ந்து நற்கதி பெற்றவர்களானோம்" எனக் கூறியமை.
- ✓ "இராமபிரானைப் பிரியாமல் வாழ்பவன்" என இராமனை நினைவூட்டி, கோபத்தைத் தணிவித்தமை.
- ✓ வானரங்கள் அச்சம் கொண்டுள்ளனர் எனக் கூறி, இலக்குவனது வீரத்தைப் புகழ்ந்தமை.
- ✓ வானர வீரர்களை உன்னவர்கள் எனக் கூறியமை.

**( 08 புள்ளிகள் )**

**( 08 + 07 = 15 புள்ளிகள் )**

5. "உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை" என்பதை வலியுறுத்துவதாக **உரிமையும் கடமையும்** என்ற கட்டுரை அமைந்துள்ளது. விளக்குக.

- ✓ உரிமையை மட்டும் மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால் குழப்பம் மிஞ்சும். அத்துடன் உரிமை நிலைக்காது.
- ✓ பலர் இன்று உரிமையைப் பற்றியே போராடுகின்றார்கள் கடமையில் கருத்துச் செல்லுத்துவது குறைவு.
- ✓ எந்தக் குடும்பத்தில் கணவனும் மனைவியும் உரிமையைப் பற்றி மிகுதியாக நினைத்து கடமையைப் புறக்கணிக்கின்றார்களோ அந்தக் குடும்பத்தில் போராட்டம் ஏற்படும்.
- ✓ உரிமையைப் பற்றி எண்ணும் அளவுக்குக் கடமையைப் பற்றியும் எண்ண வேண்டும். இல்லையானால் குடும்பப் போராட்டம், நாட்டுக் கலகம், உலகப் போர் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது.
- ✓ உரிமையையும் கடமையையும் பலப்படுத்தும் பாலம் அன்பு, அந்த அன்பைத் தவறாகப் பயன்படுத்தினால் உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.
- ✓ கடமையைச் செய்யத் தவறுபவர்களுக்கு உரிமை கிடையாது. உரிமையை மிகுதியாக விரும்பிக் கடமையைப் புறக்கணித்தால் உள்ள உரிமையும் நிலைக்காது.
- ✓ உரிமையைப் பற்றி எண்ணும் அளவுக்கு கடமையைப் பற்றியும் உணர்வதற்குக் கற்றுக் கொண்டால் எங்கும் அமைதி நிலவும்.
- ✓ முன்னைய காலத்தில் உரிமை சிலருக்கே; ஆனால் இன்று நாகரிகம் வளர்ச்சியடைந்துள்ள இக்காலகட்டத்தில் மனிதருக்குள் பாகுபாடு பார்க்கக்கூடாது. உயர்ந்தவர், தாழ்ந்தவர் பேதமில்லை, அவரவர்க்குள்ள கடமைகள் மதிப்புடன் ஆற்றப்பட வேண்டும்.

**( 15 புள்ளிகள் )**

**6.** புலம்பெயர்ந்து வாழும் ஒருத்தனின் தனிமையையும் அவலத்தையும் சித்திரிப்பதாக **தீவு மனிதன்** என்ற சிறுகதை அமைந்திருக்குமாற்றை விளக்குக.

- சிறு பிராயத்தில் ஏற்பட்ட அனுபவங்கள்
  - ✓ அயலவர்கள் அவனது குடும்பத்தைப் பற்றி அவன் காதுபடப் பேசியமை. அதனால் அவன் தனிமையை விரும்பியமை.
  - – "எங்கள் தோட்டப் பயிரை மட்டும் வெள்ளாடு மேய்ந்ததாகக் கதை அளந்தார்கள். எங்கள் தோட்டத்திற்கு மட்டும் வேலி இல்லை என்ற சொல்லிச் சிரித்தார்கள். நான் கூசிக்குறுகிப் போனேன்."
  - – நண்பர்களுடன் மீண்டும் சேர்ந்து விளையாடுவதற்கான ஏக்கம்.
  - ✓ பாடசாலை விட்டு வீடு வந்ததும் தீவினுள் தனிமையை விரும்பியமை

- புலம்பெயர்ந்த நிலையில் இளம் பராயத்தில்
  - ✓ கவிதை எழுதும் நண்பனின் பிரிவு.
  - – "இவர்களுக்குத் தெரியுமா எனது தீவைப் பற்றி.... அதன் தனிமை பற்றி.... அதன் கொடுமை பற்றி"
  - – அவர்களது உறவிற்காக ஏங்குதல்.
  - ✓ குடும்பத்துடனான உறவும் பிரிவும்
  - – "எங்களுக்கு ஒன்றும் இல்லை ஆனால் நீ வந்து போவதை தெருவில் கிடக்கிற கண்கள் கவனித்து வாய்கள் தவறாகப் பேசலாம். அதனால் ..... என்று அவன் சொன்ன போது நான் திரும்ப துண்டு துண்டாய் உடைந்து போனேன்".
  - – "எனது காயங்களை மூடிக்கட்ட என்னிடம் இருக்கும் ஒரேயொரு பான்டேஜ்" என சிரிப்பைக் கூறியமை.
  - – "எவ்வளவு தான் அடக்கி வைத்தாலும் துக்கம் தொண்டையையும் பிய்த்துக் கொண்டு வெளியில் வந்து விட்டது. கண்கள் கன்னங்களை ஈரமாக்கினாலும் வெப்பமாய் இருந்தது."
  - – "இது எனது தீவு. இங்கு நான் அழலாம். தாராளமாக அழலாம். சத்தம் போட்டு அழலாம்."
  - ✓ தீவுக்குள் தனிமையில் இருப்பதைப் பாதுகாப்பென உணர்தல்.
  - ✓ வானத்தை இரசித்தல்.
  - ✓ பழைய நினைவுகளில் மூழ்குதல்.
  - ✓ ஒருசில பொருட்களுடன் மட்டும் வாழ்க்கை நடத்தல்.

**( 15 புள்ளிகள் )**

7. **காலந்தோறும் அகம்** எனும் பாடப்பரப்பில்,

(i) தலைவன் - தலைவியரிடையிலான சிற்றின்பக் காதலும்

(ii) இறைவன்மீது ஆன்மா கொண்ட பேரின்பக்காதலும்

எடுத்துரைக்கப்பட்டிருக்குமாற்றை விளக்குக.

(i) சிற்றின்பக் காதல்

**சுனைப்பூ....**

✓ இயற்கைப் புணர்ச்சி புணர்ந்து நீங்கும் தலைமகன் தனக்குத் தானே சொல்வதனூடாக சிற்றின்பக் காதல் வெளிப்படுதல்.

- "நீர்ச்சுனையின் அருகே உள்ள பூக்களைப் பறித்து மாலையைத் தொடுத்து தினைத் தோட்டத்துக்கு வரும் கிளிகளை விரட்டுகின்ற அழகிய கண்களை உடைய இப்பேதைப் பெண்தான் அறிந்தாளோ? இல்லையோ?"என ஏக்கத்துடன் உரைப்பதன் மூலம்.
- "நடுச்சாமத்தின் பின் துயிலும் யானையைப் போல் பெருமூச்சு விட்டேன். என் உள்ளம் மீண்டும் அவளிடமே சென்று விட்டது"என்று கூறுவதன் மூலம்.

**சிரல்வாய்....**

✓ செயல் முற்றுப்பெற்று மீளுகின்ற தலைமகன் பாகனுக்குச் சொல்வதனூடாகச் சிற்றின்பக் காதல் வெளிப்படுதல்.

- சிறந்த செல்வத்தையும், மழை போன்ற குளிர்ந்த கண்களையும் சிலவாகிய மொழியினையும் உடைய காதலியின் ஊரானது நமக்கு நல் விருந்தாய் அமையும் இடமாகட்டும் என்பதனூடாகத் தலைவன் காதலியைச் சேர்ந்து இன்புற்றிருக்க விரும்புதல் புலனாகிறது.

**உள்ளம் போய்..**

✓ தமயந்தி காதல் மீக்கூர, உள்ளம் வெட்கம் முதலிய யாவற்றையும் இழந்து உயிரும் தளரப் பெற்றாள் என்று சொல்வதனூடாக சிற்றின்பக் காதல் வெளிப்படுதல்.

- மன்மதனுடைய மலர்கணைகள் தன் உள்ளத்தில் பாய்ந்து வருத்துவதாகக் கூறுதல்.
- காதலால் உள்ளம் போய், வெட்கம் போய், சோர்ந்து, கண்களிலிருந்து நீர் ஊற்றாக ஓட, நெருப்பில் வேகின்ற மெல்லிய தளிர் போன்று ஆவி தளர்ந்து சோர்வுற்றதாகக் கூறுதல்.

(ii) பேரின்பக் காதல்

**மத்தளம் கொட்ட...**

✓ கண்ணன்மீது காதல் கொண்ட ஆண்டாள், தன்னை அவனிடமே அர்ப்பணிக்கின்றாள்.

✓ கனவிலும் நனவிலும் கண்ணன் நினைவாகவே காணப்படுன்ற ஆண்டாள் கண்ணனே தனது கைத்தலம் பற்றுவதாகக் கனவு காண்கிறாள்.

✓ "முத்து மாலைகள் நிரைநிரையாகத் தொங்க விடப்பட்ட பந்தலின் கீழே வந்து மதுசூதனன் என் கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்.." என்று பரம்பொருளே தன்னை ஆட்கொள்வதாகக் கூறுவதன் மூலம் பேரின்பக் காதல் வெளிப்படுகிறது.

**நேற்றிரா...**

✓ ஏகாம்பர நாதரின் மீது காதல் கொண்ட பெண், அவரை அடைவதையே இலட்சியமாகக் கொள்கிறாள். தான் கனவில் கண்ட அவரைக் கண்டீர்களோ எனத் தோழிகளிடம் அப் பெண் வினவுகின்றாள்.

- கனவில் ஏகாம்பர நாதரே தனது கையைப்பற்றியதாகவும், அவரை களித்திருந்து விட்டுப் போகும்படி தான் வேண்டியதாகவும், ஆயின் அவர் மறைந்து விட்டார் என்றும் கூறுவதனூடு இறையன்பைத் தேடும் பேரின்பக் காதல் வெளிப்பட்டு நிற்கின்றது.

**( 09 + 06 = 15 புள்ளிகள் )**

**குறிப்பு :- கட்டுரை வினாக்களுக்குப் புள்ளி வழங்கும் போது மாணவரது முன்வைக்கும் திறனைக் கவனத்திற் கொள்ளவும்.**

☆☆☆